பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 07 2026** **FRIDAY** **6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் மேம்படுத்தப்பட்ட மூன்று ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

**2)** மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**3)** ஊழல் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வருவாய்த் துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் கூறியுள்ளர்.

**4)** அரசு வழக்கறிஞர்கள் நியமனம் சட்டப்படி நடைபெற்று வருவதாக தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

**5)** **Budapest** சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் மேம்படுத்தப்பட்ட மூன்று ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

சென்னையில் உள்ள பூங்கா ரயில் நிலையம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள சின்னசேலம் ரயில் நிலையம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர் ரயில் நிலையம் ஆகியவற்றை பிரதமர் திறந்துவைத்ததாக தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாரம்பரியம் சார்ந்த வடிவமைப்புடன் நவீன வசதிகளை கொண்டதாக இந்த ரயில்கள் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இப்பணிகள் மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சுய விவர கணக்கெடுப்புப் பணிகள் இன்று தொடங்கியுள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரும் 31-ஆம் தேதிவரை இப்பணிகள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து வீடுகள் கணக்கெடுக்கும் பணிகள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி, 30-ஆம் தேதிவரை நடைபெறும் என்றும் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் பெறப்படும் தகவல்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது வழங்கும் தகவல்கள்தான் திட்டங்களுக்கு அடிப்படையாகும் என்று தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு ஒவ்வொரு குடும்பமும் உண்மையான தகவல்களை கொடுக்க வேண்டும் என்றும் திரு விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமது சுய விவரங்களை தாம் பதிவேற்றம் செய்துள்ளதாகவும் திரு விஜய் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழக அரசின் பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் அதி அழுத்த பிராண வாயு சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள இந்த மருத்துவமனையில், இம்மையத்தை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

***(Sound Byte — அருண்ராஜ் - 54 Sec. )***

<<<<<>>>>>

ஊழல் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வருவாய்த் துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் கூறியுள்ளர்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிர்வாகத்தில் தவறுக்கு இடமளிக்கக்கூடாது என்பதில் தவெக அரசு உறுதியுடன் உள்ளதாக தெரிவித்தார்.

போதைப்பொருள் புழக்கத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு கே ஏ செங்கோட்டையன் கூறினார்.

<<<<>>>>>

நீட் தேர்வுக்கு எதிராக சில அரசியல் கட்சிகளின் வெறுப்பு பிரச்சாரங்களை முறியடித்து, மாணவர்கள் அதிக அளவில்

வெற்றிபெற்றுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த தேர்வில் சென்னையை சேர்ந்த வெங்கடாபதி வேலாயுதம் 12-ஆம் இடத்தை பிடித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தை சேர்ந்த 12 மாணவர்கள் சிறப்பிடம் பெற்றிருப்பதாக வெளியான செய்திகளும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நெல் கொள்முதல் தடையின்றி நடைபெறுவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகளை விற்பனை செய்ய முடியாமல் நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் காத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசின் அலட்சியமே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நெல் கொள்முதல் நிலையங்களில் குவிந்துகிடக்கும் நெல் மூட்டைகளை கிடங்குகளுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுக்காண்டுள்ளார்.

கிடங்குகளில் உள்ள மூட்டைகள் அரவை ஆலைகளுக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

<<<<<>>>>>

ஊடகத்துறையை அச்சுறுத்தும் வகையில் செயல்படும் போக்கினை தவெக அரசு கைவிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் நெறியாளருக்கு எதிராக காவல்துறை மேற்கொண்டுவரும் நடவடிக்கையை சுட்டிக்காட்டியுள்ளார்.

கருத்து சுதந்திரத்தை பறிப்பதும், மறுப்பதும் அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிரானது என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் சட்டப்படி நடைபெற்று வருவதாக மாநில அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு விசாரணை நீதிபதி திரு முகமது சபீக் முன்பு விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் திரு விஜய நாராயணன் ஆஜராகி, இந்த நியமனங்கள் பாரபட்சமின்றி நடைபெற்று வருவதாக கூறினார்.

இதனையடுத்து, இவ்வழக்கினை முடித்துவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 46 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாகை மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு ஏ எம் ஷாஜஹான் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

---------------

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட **T K** நம்பி தெருவில் அமைக்கப்பட்டுள்ள ஆதார் சேவா மையத்தை மாநில அமைச்சர்கள் திரு தென்னரசு மற்றும் திரு ரஞ்சித் குமார் இன்று திறந்துவைத்தனர்.

----------------

சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் பங்கேற்று புதிய மின்னணு குடும்ப அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------

சுதந்திர போராட்ட வீரர் வாஞ்சிநாதனின் பிறந்த தினத்தையொட்டி, தென்காசி மாவட்டத்தில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது சிலைக்கு ஆட்சியர் திரு ரஞ்ஜித் சிங் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

-----------------

வேலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு

செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ் கூறியுள்ளார்.

--------------------

விருதுநகர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு சுகபுத்ரா இன்று வழங்கினார்.

---------------

தருமபுரி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த வாகன சேவையை ஆட்சியர் திரு சரவணன் இன்று தொடங்கிவைத்தார்.

--------------

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணியில் 2 ஆயிரத்து 800 அலுவலர்கள் ஈடுபட உள்ளதாக ஆட்சியர் திரு விஷூ மகாஜன் கூறியுள்ளார்.

--------------

மதுரை மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு இயக்கத்தை ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Budapest** சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் **55** கிலோ எடைப்பிரிவில் **Haniska Lamba** வெள்ளிப்பதக்கத்தையும், ஆடவர் **125** கிலோ எடைப்பிரிவில் **Rajat Ruhal** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் **59** கிலோ எடைப்பிரிவில் **Neha** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

----------------

ஆல் இங்கிலாந்து ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Karthik Rupa Suhaas** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-11, 21-7** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Martin Heng Hei Cheung**-ஐ வென்றார்.

-----------

ஆசிய **Cadet** ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divya Makwana** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **48** கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

ஆசிய **Age Group** நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhinidhi Desingu** வெண்கலப்பதக்கம் வென்றார்.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

உலக கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Salima Tete** தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் அடுத்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கி, 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

----------------

இந்தியா — நெதர்லாந்து இடையே 21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஹாக்கிப்போட்டி பெல்ஜியத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

**<<<<<END>>>>>**